குயில்

பதிவெண்: எம். 7030.

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 9-12-58 செவ்வாய் | இசை: 28

புறப்படுவீர்! விடுதலைப் போர்!

நாட்டைமீட்க மனமிருந்தால் இங்குவாரீர் – இனத்தைக்
காட்டிக்கொடுக்க மனமிருந்தால் அங்குப் போவீர்
ஏட்டிற்புகழ் எழுதவென்றால் இங்குவாரீர் – இல்லை
இழிவுதேட மனமிருந்தால் அங்குப் போவீர்
வாட்டும்பசி நீக்கவென்றால் இங்குவாரீர் – பகைவர்
வால்பிடித்து வாழ்வதென்றால் அங்குப் போவீர்
மூட்டிவிட்டார் நம்பெரியார் போர்ப்பெருந்தீயை – அதில்
மூழ்கவாரீர் மூழ்கவாரீர் தோழன் மாரே

தமிழைமீட்க மனமிருந்தால் இங்குவாரீர் – தமிழ்த்
தாயைக்கொல்ல மனமிருந்தால் அங்குப் போவீர்
சமையவெறி ஒழிக்கவென்றால் இங்குவாரீர் – கெட்ட
தறிதலைகள் வேண்டுமென்றால் அங்குப் போவீர்
நமதுடைமை நமக்கென்றால் இங்குவாரீர் – கெட்ட
நாய்ப்பிழைப்பே நல்லதென்றால் அங்குப் போவீர்
குமைத்துவிட்டார் நம்பெரியார் போர்ப்பெருந்தீயை – அதில்
குதித்திடுவீர் குதித்திடுவீர் தோழன் மாரே

மானங்காக்க மனமிருந்தால் இங்குவாரீர் – சிறிதும்
மானமில்லார் வேண்டுமென்றால் அங்குப் போவீர்
ஆனமட்டும் பார்ப்ப தென்றால் இங்குவாரீர் – பகைவர்
அடியைநத்தி வாழ்வதென்றால் அங்குப் போவீர்
போனதில்லை தமிழர்வீரம் இங்குவாரீர் – கெட்ட
புன்செயலே நல்லதென்றால் அங்குப் போவீர்
தேனருவி, விடுதலைப்போர்! வாழ்கபெரியார்! மிகவே
சிறப்படைவீர் புறப்படுவீர் தோழன் மாரே

வருக விடுதலை வாழ்வு!

விடுதலை வாழ்வே வாவா — எம்
வெற்றிப் பயனே வாவா
கெடுதலை மாய்த்தாய் வாவா — ஒரு
கீழ்மை தொலைத்தாய் வாவா
தடதட வென்றே சாதி - எனும்
தடையை இடித்தாய் வாவா
அடிமை தவிர்த்தாய் வாவா - நல்
அன்பில் உயர்ந்தாய் வாவா

வாழ்வின் பயனே வாவா - தமிழ்
மக்கள் விருப்பே வாவா
தாழ்வு தவிர்த்தாய் வாவா - எம்
தமிழின் காப்பே வாவா
ஏழ்மை துடைத்தாய் வாவா - நல்
இன்பக் கடலே வாவா
ஆழப் புதைத்தாய் மடமை - நல்
அறிவில் உயர்ந்தாய் வாவா

ஒருமொழி யால்ஓர் இனமாம் — அவ்
வோரின மேஒரு நாடாம்
ஒருநா டின்றொரு நாட்டைப் — போய்
ஒடுக்குதல் ஒப்பாய் வாவா
ஒருவன் வாழ ஒருவன்
உழைக்க வேண்டும் என்னும்
இருளைப் பிளப்பாய் வாவா — இங்
கெவர்க்கும் ஒளியே வாவா

ஊணும் உடையும் வீடும் — நல்
உயிரின் நலமொடு கல்வி
பேணும் வகையில் யாண்டும் — காணில்
பெரியவர் சிறியவர் இல்லை
ஆணுரி மைபெண் ணுரிமை — நல்
அறத்தின் காப்பே வாவா
வாணாள் இடையில் தமிழர் — பெற்ற
மாசு துடைத்தாய் வாவா

உரிமை வாழ்வே வாவா — எம்
ஒற்றுமை விளைவே வாவா
பெரிது முயன்றார் தமிழர் — அவர்
பெற்றதொர் பேறே வாவா
அரிது புரிந்தார் தமிழர் — அவர்
ஆர்ந்த புகழே வாவா
வரைகடல் உலகும் தமிழும் — வானும்
வாழ்நாள் வாழ்வாய் வாவா.

புதுச்சேரி, தி. வ. ஆ கககூஅகூ கார்த்திகை உச

தொண்டுக்கு இடம் திராவிடர் கழகந்தான்!

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அயலாரால் வஞ்சிக்கப்பட்டு வரும் ஓர் இனம் தமிழினம்: அயலாரால் துன்புறுத்தப்பட்டு வரும் ஓர் இனம் தமிழினம்: அயலாரால் இகழ்ச்சியைச் சுமந்துவரும் ஓர் இனம் தமிழினம். ஆதலால் அது வாய்ப்பு நேரும்போது அந்த அயலாரைப் பழிவாங்கப் பின்வாங்காது.

பட்டு வரும் துன்பத்தால் கெட்டு வரும் இனம் தமிழினம் என்று தோன்றலாம். ஆனால் தன் உள்ள உறுதியை விட்டுவரும் என்று எந்த மனிதனும் கொள்ளவேண்டாம். உலக வரலாறு கூட அவ்வாறு எண்ணவில்லை.

தமிழினம் கேடுற்றுக் கேடுற்று மிகக் கேடான நிலையில் வீழ்ந்துவிட்டது என்று கூறுவதில் நூற்றுக்கு ஐந்து விழுக்காடுகூடச் சரியில்லை. தமிழினம் வாழ்ந்த இனம்; தமிழினம் பண்பட்ட உள்ளம் படைத்தது. பகைவரால் அழிக்கமுடியாத மொழியையுடையது; உயர்ந்த — செம்மையான — உண்மையே செறிந்த இலக்கியத்தைக் கொண்டது.

தமிழினத்தைப்பற்றிப் பகைவர் போடும் கணக்குச் சரியல்ல. சமயங்கள், சாதிகள் மூட வழக்கங்கள், கட்சிப் பூசல்கள் இவைகளைக் கொண்டு தமிழினத்தை அலைக்கழித்து விட்டோம் என்றுபகைவர் எண்ணலாம். அவைகள் இன்றையவரைக்கும் ஒரு தமிழனின் உள்ள உறுதியைக்கூட மாற்றவில்லை.

ஆயிரம் ஆண்டுகளாகப் பாரதம்படிக்கிறது தமிழினம். ஆயிரம் ஆண்டுகளாகத் துரோபதை அம்மனுக்குப் பொங்கலிடுகின்றது தமிழினம்; ஆயிரம் ஆண்டுகளாக ஐந்துபேருக்குத் துரோபதையைத் திருமணம் பண்ணிவைத்துத் தேங்காய் உடைக்கின்றது தமிழினம். ஆனால் அதே தமிழினம் – ஒரு தமிழச்சிக்கு ஒரு கணவனுக்கு மேற்பட்ட பல கணவன்மாரைத் தேட எண்ணியதுண்டா? அப்படி எண்ணும்படி தூண்டப்பட்டதுண்டா? தூண்டியவன் உண்டானால் அவன் உயிர் தப்பியதுண்டா?

பகைவர் இங்கு வளர்த்ததாக எண்ணி மகிழும் வைதிகம், கட்சிப்பூசல்கள் அனைத்தும் தமிழினத்தின் முதன்மையை அணுவளவும் அசைக்கவில்லை. அசைக்கமுடியாது.

இனம் என்பது தனி மனிதனைக் குறிப்பதன்று. இனம் என்பது எண்ணிக்கை பற்றியதன்று. இனம் என்பது உருவமுடையதன்று. அது நிலைத்த ஒரு பண்பாட்டின் பெயர்.

தமிழினம் தொன்மையானது. மானமுடையது. தன்னிலையினின்று வீழாததும் வீழ்ந்தால் வாழாததும் எதுவோ அதுதான் மானம் என அறிதல் வேண்டும்.

பென்னாகரம் தோழர் கி. முனிசாமி அவர்கள்
குழந்தைகட்குப் பாண்டியன், செல்வம்
எனப் பெயர் சூட்டியமைக்காகவும்,
குயில் வளர்ச்சிக்காகவும் இரண்டு
ரூபாய் அனுப்பியுள்ளார்.
வரப்பெற்றோம்.
நன்றி!

—அமைச்சர்.

தமிழினம் தன் உள்ளப் பாங்கினின்று சிறிதுகூட மாறிவிடவில்லை. மாற்றிவிட எவற்ருலும் முடியவில்லை. முடியாது.

திராவிடர் கழகம் என்பது தமிழினத்தின் உள்ளப்பாங்கின் மறுபெயர். இப்படி ஒரு படைப்பு! பெரியார் செயற்கரியது செய்தார் என்ருல் – அவர் திராவிடர் கழகத்தைத்தான் செய்தருளினுர் என்பதுதான்!

திராவிடர் கழகம் இன மீட்சிக்குப் போர் தொடங்கி விட்டது. எந்தத்தமிழன் மறுப்பான்? எந்தத்தமிழன் அஞ்சுவான்!

ஒவ்வொரு தமிழனும் இன்று தொண்டுக்கு முந்துகின்ருன். தமிழினம் தொண்டுசெய்யத் துடிக்கின்றது. தொண்டுக்கு இடம் திராவிடர் கழகந்தான் !

இழந்த இளமை

ஆளூர் – மருது.

வானிலே தோன்றி மறையும் மின்னலைப்போல்
வாழ்விலே ஒருமுறை வந்துபோகும் வாலிபமே!
ஏனிப்படி வேகமாய் ஓடிவிட்டாய்?
என்னிளமையையும் அழகையும் எடுத்துக் கொண்டு!

முத்தெடுத்து விட்டெறிந்த சிப்பியைப்போல்
'முப்பத்திரண்டு' பற்களும் போன பொக்குவாயே!
தத்தெடுத்துப்புதுப் பற்களைத்தான்வைத்திட்டாலும்
தடித்த உணவைக்கடித்திட அதனுலும் முடியாதே!

பால் ஒளி பொழியும் முழுமதியைப்போல்
பால் வடிந்து கொண்டிருந்த வண்முகமே!
மேல் பூச்சை எவ்வளவுதான் பூசினுலும்
'மேடுபள்ளங்கள்' தான் மறைந்து போயிடுமோ ?

மண்ணில் கொட்டிய தண்ணீரைப் போல்
மாயமாய் மறைந்துபோன இறந்த காலமே!
எண்ணியே இனித் திரும்பி வரமுடியுமா?
உடலைவிட்டே என்னுயிர் போகுமுன்னல்!

தனித்தமிழே வேண்டும்!

ஈரோடு – குமணன்.

இனிமைசெய் தமிழினிலே பிறமொழிச் சொற்கள்
எண்ணற்றுக் கலந்துறைத லிங்குக் கண்டோம்
தனித்தநறுந் தமிழ்மொழியின் எழிலைச் சாய்த்தே
தமிழ்தன்னைத் தரைமட்ட மாக்க மாற்ருர்
கனியினிலே ஊசியினைப் புகுத்தல் போலே
கனித்தமிழில் தம்சொற்கள் நுழைத்து விட்டார்
தனித் தமிழின் தூய்மைநிலை காணல் வேண்டின்
தமிழல்லாப் பிறசொற்கள் விலக்கல் வேண்டும்.

நோய்வந்து நல்லுடலைப் பற்றல் போல
நுவலரிய நந்தமிழைப் பற்றி நிற்கும்
வாயினிலே நுழைதற்கு இயலாச் சொற்கள்
வாய்கூசும் வடசொற்கள் அனைத்தும் நீக்கி
ஆய்ந்தெடுத்த தமிழினிலே தேவை யாயின்
அழகுபெறப் புதுச்சொற்கள் பலவும் கூட்டித்
தாய்தமிழைத் தூய்தமிழாய் ஆக்கல் வேண்டும்
தனித்தமிழால் தமிழிசையை வளர்த்தல்வேண்டும்

அரையாண்டுச் சந்தாதாரர்களுக்கு!

உங்கள் சந்தா
இசை இருபத்தாறுடன்
முடிவடைந்ததால்
பணம் அனுப்பிச் சந்தாவைப்
புதுப்பித்துக்கொள்ளவும்.

கொட்டுது போர்முரசு!

—புதுவை, செல்வா—

(கும்மி மெட்டு)

நந்தமிழ் நாட்டை நினைத்தாலே — எதிர்
நிற்குதே அடிமை முன்னாலே
செந்தமிழ் நாட்டின் விடுதலைக்கே — ஒன்று
சேர்ந்துழைப்போம் வெற்றி தான்நமக்கே.

இத்தனைக் காலம் அடிமையிலே — நாம்
இருந்து வாழ்தல் மடமையன்றோ?
நத்திப் பிழைத்திட வந்தவர்கள் — இங்கு
நாடாள வேடிக்கைப் பார்த்தல்நன்றோ ?

ஆண்ட பரம்பரை தமிழரினம் — இன்று
அத்தனைப் பேரும் மடிந்தனரோ ?
மீண்டும் முயன்றுநம் நாடடைவோம் — இந்த
மேதினிப் புகழ வாழ்தல் என்றோ?

கட்டுக் கடங்காத காளையரே — தமிழ்க்
கன்னல் மொழிபேசும் மறவீரரே
கொட்டுது விடுதலைப் போர்முரசு — உடன்
கிளர்ந்தெழு வோம்;இனி நம்அரசு!

பெற்றால்விடுதலை இன்றேல் வீரச்சாவு — என்ற
பெருந்துணி வின்றேகொள்வோம் நாம்
ஒற்றுமையோடு புறப்படுவோம் — இனி
உள்ளத் துணிவுடனே யுழைப்போம்

நாடு விடுதலை பெறுவதற்கும் — இங்கு
நான்குகோடி மக்கள் வாழ்வதற்கும்
வீடுமனை சுற்றம் யாவையுமே — நீக்கி
விடுதலைப் படையில் முன்னே நிற்போம்

நாட்டின் விடுதலை நமதுஉயிர் — இந்த
நானில மெல்லாம் நமக்கே சொந்தம்
வீட்டிற் கிருவர் புறப்படுவோம் — எங்கும்
வெற்றித் தமிழ்க்கொடி நாட்டிடுவோம் !

அவ்வையின் மாண்பும் அதியமான் அன்பும்

சைதை. ஓடையான்

ஞாலத்தில் உயர்ந்த நாடு
நற்றமிழ் இனத்தோர் நாடு
வேலெடுத் திளைஞர் ஓடி
வேங்கையை எதிர்த்த நாடு
பாலகன் வாளெ டுத்துப்
போர்க்களம் சென்ற நாடு
கோல்வழு வான பாண்டிக்
கொற்றவன் மாய்ந்த நாடு

வேங்கையின் பல்கொ ணர்ந்து
மங்கையை மணந்த நாடு
தெங்கிய அறிவி னாலே
தெள்ளிய தமிழில் பொய்யாப்
பாங்குறுங் குறள மைத்து(ப்)
பைந்தமிழ்க் குயர்வு செய்தே
ஓங்கிடும் சீர்த்தி பெற்றான்
உயர்கவி வள்ளு வன்காண்!

அதிமான் நெடுமா னஞ்சி
அவ்வையின் அருமை நண்பன்
புதியதோர் அரிய நெல்லிப்
பழந்தனைப் பெற்றான் உண்ண
மதியதற் கொப்ப வில்லை
மாகவி அவ்வைக் கீந்தான்
அதியமான் மாண் பறிந்தே
அவ்வையும் மனம்நெ கிழ்ந்தாள்!

விடுதலை முழக்கம்

இராங்கியம் எழில்வழுதி.

சிட்டுக்கள் உறவாடிக் காதல் பாட,
சிள்வண்டின் னிசைபாட ஏற்றுற் போலக்
கட்டழகு மயில் களினம் நடன மாடக்
கண்டிருந்த வான்கோழி தானும் ஆட
எட்டாத உயரத்தில் இருந்து கொண்டே
இளவணில்கள் 'கீச்கீச்'சென் றேந கைக்க
மொட்டாக வெண்பூக்கள் சிரித்து நிற்க
முதுபெருமை காட்டுகின்ற சோலை கண்டேன்!

ஓடுகின்ற வழியெல்லாம் உவகை சேர்த்தே
உயிர்காக்கும் பயிர்காத்துச் செழுமை தேக்கிக்
கூடுகின்ற மக்களுக்கு வாழ்த்துக் கூறிக்
குவலயத்துப் போர்முழக்க ஓசை கூட்டிப்
பாடுகின்ற நல்லாற்றின் வழியில் சென்றேன்!
பார்வாழத் தான்வாழும் பண்பைக் காட்டி
ஓடுகின்ற ஆற்றினையே வாழ்த்தி ஏத்தி
ஓடுகின்றேன்! ஓடுகின்றேன் ஆற்றோ ரத்தே!

கடற்கரையின் மணற்பரப்பில் ஓடி ஆடிக்
களைத்துப்போய் அலைபார்த்தே அமைதிபெற்றேன்!
உடற்குன்றின் தினவெடுத்த தோள்கள் போல
ஓ'வென்ற பேரொலியின் கடல லைகள்
படர்பரப்பில் ஏற்படுத்தப் பார்த்தே நின்றேன்!
பார்த்தேனு? நின்றேனு? முழக்கம் கேட்டுத்
துடிதுடித்தேன்! உணர்வுகொண்டேன்!
தோள்கள் விம்மத்
தூய்தமிழ்ர்க் கின்னல்தரும் வடக்கைப் பார்த்தேன்!

"சலசலப்புக் காட்டோசைத் தமிழர் நெஞ்சம்
தனித்தனியே ஒலித்ததடா சோலை போல!
நலஞ்செய்யும் ஆற்றைபோற் றமிழ ரெல்லாம்
நற்பெரியார் செல்வழியைத் துணையாக்
கொண்டார்!
வளம்காண்போம்! வளநாடு காண்போம் என்றே
வாழ்வுபெறச் சூளுரைத்தான் தமிழர் நாட்டுக்
குலம்முழக்கும் அலைமுழக்க ஓசை உங்கள்
கூற்றுகும் உணர்வீர்!" என் றுரைத்து நின்றேன்!

வருவீர் அத்தான்

— ஆதிரை —

மங்காத நிலவென்றீர் ஒளிமு கத்தை
மானெக்கும் விழியென்றீர் கண்கள் தம்மை
தங்காது தமிழ்ச்சொற்கள் கானில் உன்னைத்
தடைகடந்து ஓடிவரும் கண்ணே என்றீர்
மங்காத மான்விழியும் முகமும் இன்று
மருளுடனே ஒளிநீத்த வாட்டங் காணீர்
எங்குற்றீர் இந்நாளில் இனிமை யற்றேன்
எழிலற்றேன் வண்ணமுகக் களையு மற்றேன்

சங்கத்து மொழியென்றீர் பேசும் பேச்சை
செவ்வானப் பொன்மேனி உடலம் என்றீர்
பொங்கித்தேன் பாய்ந்திடுமே கானில் உன்னைப்
புத்தமுதப் பொற்சிலைநீ தானே என்றீர்
எங்கத்தான் என்றேனை இங்கிங் கென்றே
என்னென்ன செய்தீர்கள் என்றன் அத்தான்
எங்குத்தான் போயுள்ளீர் சொல்க அத்தான்
இனித்தாளேன் மொழிகுன்றி உடலம் நைந்தேன்

வான்முகிலைப் பூங்குயிலைத் தென்றற் காற்றைப்
போயணுகித் தூதேனும் செல்லக் கேட்டேன்
நான்மாட்டேன் நான்மாட்டேன் என்றி யம்பி
நழுவினவே ஒவ்வொன்றாய் ஏனோ அத்தான்
வான்முகிலின் தன்மையொடு குயிலின் ஓசை
தென்றல்காற் றின்குளிர்ச்சி அற்றேன் என்றோ
ஏன் அத்தான் மழைக்கால வரவும் காணீர்
எங்குள்ளீ ரானாலும் வருவீர் அத்தான்!

பகற்கனவுதான்.

சேலம், முனுசாமி.

முன்னேற்ற மென்பர் "முரசொலி"ப்பர் தம்மினத்தைப்
பின்னேற்றுங் கொள்கையினைப் பேணியே-நன்கிசைப்பர்
வெற்றி யெமக்கென்று வீணில் அலைகின்றார்
முற்றும் பகற்கனவு தான்.

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி கக.

இடம் : சோழநாடு, உறையூர், அரண்மனை வாயில்.

காலம் : காலை.

உறுப்பினர் : கோப்பெருஞ்சோழன், அரசி, அமைச்சர், படைத்தலைவர் பருஉத்தலையார், இளங்கோச் சோழன், படைமறவர், செய்தி அறிவிப்போன், புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார், வேவு பார்ப்போன்.

காட்சித் தலைப்பு :

உள்நாட்டுப் போர்

நிகழ்ச்சி : அண்டியூர்ச் சாலையில் நிற்கும் இளங்கோச் சோழனின் பெரும் படையின் ஒருபகுதி அரண்மனை வாயிலையடைகின்றது. அதற்குத் தலைமை தாங்கியிருக்கின்றார் இருவர்; ஒருவன் இளங்கோச் சோழன். மற்றொருவன் அவன் தம்பியாகிய செங்கோச்சோழன். போர்முரசு முழங்குகின்றது. செய்தி அறிவிப்போன் ஒருவன் அரண்மனைக்குள் நுழைகின்றான்.

கோப்பெருஞ்சோழன் : (அமைச்சனை நோக்கி) அரண்மனை வாயிலில் கூச்சல் என்ன? முரசம் என்ன?

அமைச்சன் : எதிர்பாராத புதுமை! படைத் தலைவரையும் காணோம். இதோ! (செய்தி கொண்டு வருகின்றான் ஒருவன்.)

செய்தி- மாப்பெரும் புகழுடைக் கோப் பெருஞ்சோழனார்க்கு வணக்கத்தோடு விண்ணப்பித்துக் கொள்வது :

பெருமானே, ஆண்டு பலவாயின; உங்களை முதுமை வருத்திற்று. அதனால் ஆட்சி முறை தவறிற்று; நீங்கள் முடி துறக்க வேண்டும். ஆட்சியை இளங்கோச் சோழனிடம் இப்போதே ஒப்படைக்க வேண்டும். இந்த இறுதிச் செய்தியை உங்கட்குக் கூறி வரும்படி எனக்கு ஆணையிட்டார் தங்கள் இளங்கோச் சோழனும், செங்கோச் சோழனும்.

கோப்பெருஞ்- எப்படி? எப்படி?? இறுதிச் செய்தியா? எனக்கா? என்மக்களா சொன்னார்கள். முரசு போர்முரசா? அரவம் படையரவமா? என் மக்கள் எங்கே? வாயிலில் உள்ளார்களா?

செய்தி : ஆம்! போர் ஆயத்தமாக.

(கோப்பெருஞ்சோழன் வாளை உருவிக் கொண்டு ஓடுகின்றான்)

வாயிலில்

வாளுங் கையுமாகக் கண்ட இளங்கோஞ் சோழனும். செங்கோச்சோழனும் சிங்கத்தைக் கண்ட சிறு நரிகள்போல் பறக்கின்றார்கள். முன்னின்ற துணைப்படைத்தலைவன் கழுத்தும் அவன் ஏறியிருந்த குதிரைக் கழுத்தும் துண்டாகி விழுகின்றன. மற்றும் பலர் கால், கை, முதலிய உறுப்புக்கள் துணிக்கப்பட்டு விழுகின்றார்கள். மற்றவர் ஓடுகின்றார்கள். அதே நேரத்தில் வேவு பார்ப்போன் ஒருவன் அரசனை நோக்கி ஓடி வருகின்றான்.

வேவு- அரசே, அண்டியூர்ச் சாலையை விட்டு வந்துகொண்டிருக்கின்றது ஒரு படை!

அரசன் : படையை நடத்துகின்றவன்?

வேவு : இன்னான் என்று அறியக்கூட வில்லை.

அரசன்- என்மக்களைக் கண்டாயா?

வேவு : இல்லை. ஆனால், படை இந்த நாட்டுப் படை, படைவீரர் அனைவரும் சோணாட்டாரே.

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

பகுதி

இஃது பகுரிதி என்ற வடசொல்லின் சிதைவென்று வை. மு. கோபாலகிருட்டின மாச்சாரி முதலிய பார்ப்பனர் எழுதியுள்ளார்கள். இது முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பானின் செய்கையை ஒப்பதாகும். பகு என்ற முதனிலை அல் இறுதிநிலைபெற்றுப் பகல் என்று வரும். அப்பகல் என்பது வேறுபாட்டால் பால் எனவும் வரும்'பால்வரு பனுவலின்'(கம்ப யுத்த விபீ 78) என்பதிற்போல. அப் பகு என்பதே அகரச் சாரியையும் வு இறுதிநிலையும் பெற்றுப் பகவு எனவரும். அதுவே பு இறுதிநிலை பெற்றும் தல் இறுதிநிலைபெற்றும் தி இறுதிநிலை பெற்றும் பகுப்பு, பகுதல், பகுதி எனவும் வரும். பகுதி, முதலியவாக இங்குக் காட்டப்பட்ட அனைத்துக்கும் பிரிவு என்பதே பொருள்.

எனவே பகுதி என்பது தூய தமிழ்ச்சொல்லாதல் வெளிப்படை. இவ்வாறுள்ள தமிழ்ச் சொற்களையும் வடசொல் என்று கூறும் வடவர் எண்ணம் நாம் அறிந்ததேயாகும்; தமிழையே வடமொழிச் சேற்றில் புதைத்து அதன்வாயிலாகத் தமிழரை ஒழித்துக்கட்டுவதே அவர் எண்ணம் என்பது தெளிவு.

அவர்களின் இந்தத்தீய-கொடிய முயற்சியானது அவர்கட்குப் பயனளித்தே வந்துள்ளது வண்ணாஸ்த்ரீ என்பதுதான் வண்ணாத்தி என்றாயிற்று எனக் கூவுகின்ற மடையர்களையும் அவர்கள் உண்டாக்கிவிடவில்லையா?

கடிகை

கடிகா என்ற வடசொல்லினின்று கடிகை வந்தது என்று கூறி இழுக்குவார்கள் வடவர்.

கடி என்பது கடிகை எனத் திரிந்தது.

கடி என் கிளவி விரைவை உணர்த்தும். அது நாட்காலத்தினும் விரைந்து தீர்வது என்ற பொருளில் அமைந்துள்ளது. இதனையும்

> கடிகைக் கிளவி நாழிகை கபாடத்திடுதாள்
> கண்டமும் துண்டமும் இசைக்கும்

என்ற பிங்கலந்தை நூற்பாவையும் நோக்குக. கடிகை என்பது நாட்காலத்தின் நுண் பகுதிக்கும் ஆகும் என்பதை இதனின்று அறியலாம். இனி, கடி என்பது கடிகை எனத் திரிதலுண்டா என்பார்க்கு தொல். 383ம் நூற்பாவின் உரையே பதில் கூறும்.

எனவே கடிகை என்பது தூயதமிழ்ச் சொல்லே எனக் கடைப்பிடிக்க.

▭★▭

அரசன் : படைத்தலைவர் பரூஉத் தலையார் எங்கே?

வேவு : எங்கும் காணவில்லை.

அரசன் : உடனே படைத் தலைவரைத் தேடுக. வீட்டில், வீட்டின்புறத்துச் சோலையில். உடனே போ.

(வேவு பார்ப்போனாகிய அந்த மறவன் விரைந்து செல்லுகின்றான்)

மற்றொருபுறம்

அரசன்- *(அமைச்சனை நோக்கி)* அமைச்சரே நம் படையை ஆயத்தப்படுத்த வேண்டும். போனவர் போக இருக்கும்படை திரண்டால் போதும். என் மக்கள் எங்கே பதுங்கினார்கள்! தெரியவேண்டும்.

(அமைச்சர் விரைந்து செல்லுகின்றார். அரசனும் ஒரு குதிரை ஏறி நகரைச் சுற்றுகின்றான்.)

★▭★

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு:

முழுப்பக்கத்திற்கு	ரூ.	100
அரைப்பக்கத்திற்கு	ரூ.	50
கால் பக்கத்திற்கு	ரூ.	30

மருத்துவப் பகுதி (தொடர்ச்சி)

உயிர்ச்சத்து

சித்தன்

'உயிர்ச்சத்து' நாமுண்ணும் காய்கள், கீரை,
உயர்கனி,பால், கைக்குத்தல் அரிசி, வெண்ணெய்,
தயிர்,நெய்,கோ துமை,கிழங்கு, மீனின் எண்ணெய்,
தக்காளி, பருப்புவகை, இறைச்சி, முட்டை,
வெயில்ஒளி,பா லேடுபிற பொருள்கள் தம்மில்
வேண்டுமள வுளதென்பர்; இவைகள் நாளும்
உயிர்வாழ நாமுண்ணும் பொருளே! ஆயின்
உண்ணுமள வினைமாற்றின் உயிர்ச்சத் தஃதாம்!

மேனாட்டார் உடலினிலே வலிமை பெற்றார்;
மிடுக்குநடை யோடுமுகப் பொலிவு பெற்றார்!
ஆனாலேன் நம்முகத்திற் பொலிவைக் காணோம்?
அவரைப்பின் சாய்க்கூனிக் குறுகு கின்றோம்!
கானாளும் புலிப்போத்தாய் நம்மை யாக்கும்
கைக்குத்தல் அரிசி;அதைக் கண்டார் யாரே?
வானாடக் கொடியுயர்த்தி வாழ்ந்தோம்; இன்றே
வறுமையினால் நலிகின்றோம்! நமதே ஆட்சி!

இயந்திரத்தில் அரைத்தெடுத்த அரிசிச் சோறுண்
டிளைத்தோம்;பன் னேய்கட்கு மிடங்கொ டுத்தோம்!
உயிர்காக்க மனிதர்க்குத் தேவை யாகும்,
உயிர்ச்சத்தெல் லாமதிலே இல்லை கண்டீர்!
அயராநல் லுழைப்புமுயர் உணவு மன்றோ
அடலேறுப் பிறநாட்டார் தமையாக் கிற்று!
வயிறடைந்தால் போதுமென வாழ்மக் கட்கும்
வாய்ப்பதுண்டோ நல்லுடல்தான் வழுத்து வீரே!

அரிசிச்சோற் றினைக்குறைப்போம்; பலகூ லங்கள்,
அருங்காய்க ளோடுகனி, கிழங்கு, கீரை,
பருப்புவகை, நெய்யொடுசர்க் கரை,பால் மோரைப்
பயன்சேர மிகுத்துண்போம்; பலபி றப்புள்
அரிதான பிறப்பிதுவே! ஐய மில்லை!
அதைக்காக்கும் நல்லமுதம் உணவு கண்டீர்!
தெரிந்தொருநா ளுணவிலிவைச் சேர்ப்பின், நம்மைத்
தேடிவரும் உயிர்ச்சத்து! மருந்து வேண்டாம்.

அறிக!

பணவிடை அனுப்புவோர்
எவர் பெயரையுங் குறித்தனுப்பாமல்,
அமைச்சர் – குயிலகம் – புதுச்சேரி.
என்ற முகவரிக்கே அனுப்புக.

மாணவர் பகுதி

பொறுமை கைவிடேல்

வித்துவான், வை. மாணிக்கசாமி, புதுவை.

இடுகின்ற வேலை செய்யும்
இரண்டுபெண் கடையி னின்று
சுடுகின்ற வெயிலில் வாடிச்
சுமையுடன் வந்தார்; மேனி
விடுகின்ற வியர்வை ஆலின்
விழுதுபோல் ஒழுக ஓர்பெண்
படுகின்ற துயரத் தாலே
பதைத்துளம் சோர்ந்து நின்றாள்.

மற்றொரு பெண்ணோ ஆங்கு
மகிழ்ச்சியாய்த் தொடர்ந்து சென்றாள்;
உற்றதை முதற்பெண் பார்த்தே
"உள்ளநம் சுமைகள் எல்லாம்
முற்றிலும் சமமே ஆகும்;
முகத்திலோ வாட்டம் சற்றும்
அற்றவள் போலக் காண்பாய்
அதிசயம் என்னே" என்றாள்.

என்றவள் கேட்ட போதில்
என்னுடைச் சுமையில் நானும்
மென்கொடி ஒன்றைக் கட்டி
விட்டதால் குறைந்து தோன்றும்
என்றனள்; முதற்பெண் மீண்டும்
எச்செடி அதனைச் சொல்லாய்
என்றிடப் "பொறுமை" என்னும்
எழிற்செடி என்றாள் தோழி.

பொறுமையால் சுமையை வென்ற
புதியதோர் கதையைக் கேட்ட
சிறுவர்காள்! பள்ளி வேலை
சிறிதள வதிக மாயின்
முறையிடல் விட்டு நீங்கள்
முணுமுணுப் பதையும் விட்டுப்
பொறுமையாய் முயல்வீர் ஆயின்
போற்றிடப் பெறுதல் திண்ணம்.

நச்சினார்க்கு நஞ்சா? அமிழ்தா?

கயல்விழி

இவருடைய உரையின்படியே நாம் பொருள்கண்டாலும் "இல்வாழ்க்கை நடத்தும்பொழுது தலைவிக்குத் தலைவன் எவ்வெவ் வகையிலெல்லாம் ஏற்றம் கொடுத்து அவளுக்குச் சிறப்புச்செய்ய முடியுமோ, அவ்வவ்வாறெல்லாம் உயர்வு கொடுத்தபொழுது" என்று பொருள் கொள்ளலாம்.

ஆனால் நச்சினார்க்கினியரோ ஏற்றற் கண்ணும் என்ற சொல்லுக்கு "அந்தணர் முதலிய மூவரும் தத்தமக்குரிய வேள்வி செய்யுங்கால் தம் மனைவியர் பலருள்ளும் தமக்கு ஒத்தாளை வேள்விக்கண் உரிமை வகையான் ஏனை மகளிரின் உயர்த்தல் செய்யுமிடத்தும்" என்று கூறுகிறார்.

தலைவிக்கு உயர்வுகொடுத்தல் என்பது வேள்வி செய்யும்பொழுது தலைவன் கொடுக்கும் உயர்வு தான் உயர்வா? அவ்வாறாயின் அல்லும் பகலும் அனைவரும் வேள்வி வேட்பித்துக்கொண்டே இருந்தனரா? பிற நேரங்களில் தலைவிக்குத் தரும் உயர்வு உயர்வாகாதா?

ஏற்றற் கண்ணும் என்ற சொல் எங்கே? வேள்வி எங்கே? ஏற்றற் கண்ணும் என்ற சொல் எங்கே? அந்தணர் எங்கே? அந்தணரை உயர்த்திக் காட்டவும் வேள்வியை நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைத்துக் காட்டவுமே உரையெழுதிய இந்த நச்சினார்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

அறிவு என்ற சொல்லுக்கு உரை காணும் பொழுது வேதத்தையும் ஏற்றற் கண்ணும் என்ற இடத்து வேள்வியையும் அந்தணரையும் புகுத்திய பெருந்தகை நச்சினார்க்கினியர் எஞ்சி நிற்கும் சாதியையும் குலத்தையும் புகுத்தாது வறிதே சென்றுவிடுவாரா? அவ்வாறாயின் அவர் உரை செய்த நோக்கமே நிறைவேறாது போய்விடுமே. எனவே குலம்பற்றிக் கிளந்தேடுத்துக் கூறத் தவறவில்லை.

நிறுத்தற் கண்ணும் என்ற சொல்லுக்கு தோழியானவள் தலைவனது பண்புகளைத் தொகுத்துக் கூறும்பொழுது "தோழி! நீ தலைவனைப்பற்றிக் கூறுகின்ற இந்த நற்பண்புகள் அத்தனையைக் காட்டிலும் அவன் எனக்கு மிக இனியன்" என நாம் மேலே பொருள் கண்டோம்.

ஆயின் நச்சினார்க்கினியரோ நிறுத்தற் கண்ணும் என்ற சொல்லுக்கு "தம் குலத்திற்கேற்ப நிறுத்துதலைச் செய்யுமிடத்து" என்று பொருள் கூறுகிறார்.

நிறுத்தற் கண்ணும் என்ற ஒரு சொல்லை வைத்துக்கொண்டு எங்கோ கிடந்த குலத்தை இழுத்துக்கொண்டு வந்து தமது உரை என்று பசையால் ஒட்டவைத்துச் சென்ற நச்சினார்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

அன்பு என்பது இன்ன இன்ன இடத்தில் இந்தக் குறிப்பிட்ட நேரத்தில்தான் பிறக்கும் என்ற ஒன்று அல்ல. பிறிதொன்றன் துன்பங் கண்டவழி நெகிழ்ந்து கசிந்துருகி விரைந்தெழுந்துதவும் தன்மை. கட்டுப்படுத்த இயலாத ஒன்று. இதுபற்றியே தமிழகம் பெற்ற தனிப்பெரும் பெருந்தகை வள்ளுவர் "அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?" என்னும் ஒரு வினாவை எழுப்பி அந்த உண்டோ என்னும் சொல்லிலேயே அடைக்குந்தாள் இல்லை என்னும் பொருள்பட விடையும் இறுத்துச் சென்றிருக்கிறார்.

புண்ணியவாளர் நச்சினார்க்கினியர் இந்த அன்பிற்கும் வேறுபாடு (பேதம்) கற்பித்துச் சென்றிருக்கிறார். அன்பு செய்யும் பொழுது தம் குலத்தை நினைந்து அந்தக்குலத்துக்கு இழுக்குவாரதமுறையில் அன்பு செய்யவேண்டுமாம்.

"பெருமையில் திரியா அன்பின் கண்ணும்" என்பதற்கு "தத்தம் குலத்திற்கேற்ப பெருமையினின்றும் நீங்காத அன்புசெய்து ஒழுகுதற் கண்ணும்" என்றுகூறி, அத்துடன் அமையாமல், "அந்தணர்க்கு நால்வரும், அரசர்க்கு மூவரும், வணிகர்க்கு இருவரும் தலைவியராகியவழித், தங் குலத்திற் கொண்டவரே வேள்விக்கு உரியர், ஏனையோர் வேள்விக்கு உரியரல்லாரென்பதூஉம்

விற்பனையாளர்க்கு...!

ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதிக்குள்
பட்டியல் தொகையை கண்டிப்பாய்
அனுப்பிவிட வேண்டும்.

அவ்வாறு அனுப்பாவிடில் அன்னார்க்கு "குயில்" அனுப்புவது நிறுத்தப்படும்.

எழு போர்க்கு!

திருவையாறு. தமிழ்த்துளி

செழுந்தமிழ்நாடு செறிபொருளோடு
செழித்ததுவளமோடு – புகழ்
மழுங்குதல்மீட்க மறப்புகழ்ஆர்க்க
மறவனே! எழு போர்க்குத்–தமிழக
மறத்தியே! எழு போர்க்கு.

கொழுந்தமிழ்நாடு கொடிகளினேடு
கொண்டது பலநாடு – புகழ்
விழுந்ததைமீட்க விழுப்புகழ்ஆர்க்க
வீரனே! எழு போர்க்குத்–தமிழக
விறலியே! எழு போர்க்கு.

எழுந்தமிழ்வீரம் எதிர்பனிசீறும்
இமமலேகுடைந்தேறும் – புகழ்
அழிந்ததைமீட்க அரும்புகழ்ஆர்க்க
அழகனே! எழு போர்க்குத்–தமிழக
அழகியே! எழு போர்க்கு

விழும்எதிர்நாடு: விரைவினில்ஓடு
விழுப்புகழ்தனைத்தேடு –புகழ்
கழிந்ததைமீட்கக் கனப்புகழ்ஆர்க்கக்
காளையே! எழு போர்க்குத்–தமிழகக்
கன்னியே! எழு போர்க்கு.

அவர்க்குத் தங்குலங்கட்கு ஏற்ற வகையின் உரிமை கொடுப்பரேன்பதூஉம் அவர்களும் இது கருமமே செய்தாரென்று அன்பில் திரியாரென்பதூஉங் கூறியவாறு'' என்று கூறுகிருர்.

''பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்'' என்பது தமிழ்மறை. வேறுபாடு கருதாத இனத்திடத்து குலத்தைக்கூறி. அந்தணர் நால்வரை மணக்கலாமென்றும், அரசர் மூவரை மணக்கலாமென்றும், வணிகர் இருவரை மணக்கலாமென்றும் விதி கூறி. இதில் வேள்விசெய்தற்கு உரியோர் இன்னர் என்று மேலும்கூறி, பன்னிப்பன்னி, மீண்டும் மீண்டும் வேதத்தையும் வேள்வியையும், குலத்தையும் வலிந்து உரையில் கூறிச்சென்ற நச்சினார்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

அன்பு எனப்படுவது சாதி, மதம், காலம், உயர்வு, தாழ்வு ஆகிய இவற்றையெல்லாம் கடந்து நிற்பது. இந்த அன்பிலே வேற்றுமையைக் கற்பித்து தமது உரையில் உறவாடவிட்ட உத்தமர் நச்சினார்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

வெண்தாடி வேந்தே நீ வாழ்க! வாழ்க!!

—: திருச்சி, முதுகண்ணன். :—

கெடலரிய நுண்ணறிவுங் கூர்த்த நோக்கும்
கிளர்முனைப்புந் தலைகாளிற் கொண்டோ ராகி
நெடுவானி னியல்பறிந்து கடலிற் ருவி
நீள்வையந் தனைவணக்கிப் பிறநாட் டோருங்
கடன்கொள்ளும் நாகரிகம் வாய்க்கப் பெற்றுக்
கவலையின்றி நாவலத்தோர் வாழ்ந்த காலை
மடன்வித்தி வந்தவர்செய் சூழ்ச்சி யாலே
வாழ்ந்தவர்கள் தாழ்நிலையாம் மயக்கின் மேவ

நாடெங்கு மிருட்கடலே மேவிற் ருக
நால்வருண வேலியிட்டவ் விருட்டைக் காத்துக்
கேடிழைக்கும் மதக்கோட்டை கட்டி யந்தக்
கோட்டைக்குள் வீழ்வாரை வீழ்த்து கின்ற
பாடில்லார் தஞ்சொத்தாய்க் கொண்டு வாழும்
பயனற்ற கடவுளொன்றைப் பதிய வைத்தே
ஈடில்வழி காட்டியென வடவர் வாழ
ஏமாந்தோர் துன்பத்தே ஏங்கித் தாழ

கண்டுளந்தான் பொறுக்காமல் வெகுண்டு சீறிக்
கதிர்கான்று நாடெங்குங் கறங்கிற் சுற்றி
ஒண்டமிழீர்! திராவிடத்தீர் ஒருசொற் கேளீர்
உதவிகொன்ற ஆரியந்தான் நம்மை ஏய்த்துத்
தொண்டுகொள்ளப் பல்வேறு பிரிவுண் டாக்கிச்
செம்மாந்த செய்தியினைச் சிந்திப் பீரேல்
பண்டைநெறி யுணர்ந்திடுவீர்; புலிக்கூட் டத்தைப்
பகைக்கின்ற நரிக்கூட்டம் பாரி லுண்டோ?

விழித்திடுக! மயக்குளந்தான் தெளிக வென்றே
வேளாளர் முதலியார் வீர சைவர்
செழித்தபடை யாட்சியார் செக்கார் வண்ணார்
செட்டியார் மூப்பனார் கவுண்டர் செல்வங்
கொழித்ததிரு நாட்டுக்கூட் டத்தார் போன்ற
கோட்பாடில் மூடக்கோள் தன்னை இன்றே
ஒழித்திடுக! திராவிடநாட் டினமொன் றென்னும்
உறுதிகொள்க! எனவுணர்த்தும் பெரியோய்!
[வாழி!

மூப்படைந்து தள்ளாடித் தசையுந் தோலும்
முதுமையினுக் கணிகலமாய் முதிர்ந்து துள்ளக்
காப்படர்ந்த நரம்பெல்லாம் விசிப்பு நீங்கிக்
கட்டுவிட்ட காலத்துங் காளை போலக்
கோப்படர்ந்த மொழியாலுஞ் செயலி னாலுங்
கொள்கைவித்தித் திராவிடத்தின் கேடுநீக்கும்
மீப்படர்ந்த பெரும்புகழெம் பெரியோய் வாழ்க!
வெண்டாடி வேந்தேநீ வாழ்க!! வாழ்க!!!

ஆண்டவனா? இல்லை ஆள்பவனா?

—: நல்லதம்பி, சென்னை.:—

மண்குடில் வாழ்வை நித்தம் சிதைக்கின்ற
வேல்கொண்டு தாக்கிடும் வறுமைக்களம்
புண்பட்ட வேலவன் அண்டிப் பிழைக்கின்ற
புகலற்று மண்தரை மேல்து டித்தான்
கண்கள் பெருக்கின நீரருவி-நெஞ்சம்
கக்கிக்கிற்று வெந்தழல் வேதனையை
எண்ணத் தொலையாத இன்னல்கள் சூழ்ந்தன
எரித்தன அன்னவன் இன்னுயிரை.

அடுப்பினில் தூங்கிற்று பூனைக்குட்டி-அதற்
காறுதல் கூறிற்றும் எண்ணெய்ப்புட்டி!
எடுப்பவர் இல்லாமல் நாலைந்து நாளாக
ஏங்கிக் கிடந்தன பானைசட்டி!
குடித்திடக் கூழின்றிக் கூம்பிக் கிடந்திட்ட
கோலச் சிறுமிவாய்ப் பவளப் பெட்டி
படுக்கவும் பாயின்றிப் புழுதியில் கிடந்த
பச்சையம்மா ஒருதங்கக் கட்டி!

இத்தனையும் கண்ட வேலன் துயரத்தை
எழுதிட மையில்லை ஏடுமில்லை
எத்தனைக் காலந்தான் வறுமையில் சாவதாம்
என்றைக்குத் தான்வரும் இன்பநிலை?
அத்தனைக்கும் இங்கு காரணம் என்னெனில்
ஆண்டவனா? இல்லை ஆள்பவனா?என்று
சித்தம் கலங்கிடப் பார்த்த விளக்கொன்று
சின்ன ஒளிக்கண்ணை மூடியதே!

தமிழில் கலை நூல்கள்

புதுவை "தமிழவேள்"

தமிழகத்தில் வாழ்கின்ற தமிழர்க் கெல்லாம்
தமிழொன்றே தாய்மொழியாம் என்பர்; ஆனால்
தமிழகத்தில் பிறமொழியில் பட்டம் பெற்ற
தமிழரெலாம் தமிழறிவர் தமிழில் உள்ள
அமிழ்தன்ன இலக்கியத்தின் இலக்க ணத்தின்
ஆழமெலாம் நன்கறிவர் என்று நம்பித்
தமிழ்மொழியில் அவரெழுதும் நூல்கள் தம்மைத்
தமிழிளைஞர் கற்கவெனத் தருதல் நன்றோ.

சுவரையென எழுதுவது தவறென் றெண்ணிச்
சுவற்றையென எழுதிடுவர் மகிழ்ச்சி கொள்வர்
தவறையென எழுதுவதே சரியென் றெண்ணித்
தவற்றையென எழுதாமல் விடுவர் பின்னும்
கவலையின்றி எண்ணைஎன எண்ணெய் தன்னைக்
கண்டவர்கள் வருந்திடவே எழுது வார்கள்!
இவையொழிய இலக்கணமில் பிழைகள் தம்மை
எண்ணிலொரு கணக்கினிலே அடங்க மாட்டா.

ஆங்கிலத்தில் வடமொழியில் பட்டம் பெற்றோர்
அருந்தமிழில் நூலெழுத நேர்ந்த போது
பாங்குடனே வடசொல்லோ(டு) ஆங்கி லச்சொல்
பைந்தமிழில் நுழைந்தனவாம் அன்னார் செய்த
தீங்ககற்றித் தமிழ்மொழியின் தூய்மை காக்கத்
திறமான தமிழ்ப்புலமை யுள்ளோ ரெல்லாம்
பாங்குறவே கலைநூல்கள் எழுத வேண்டும்
பாரெல்லாம் தமிழினிமை காணும் அன்றே.

வாழ்தலினும் நன்று

சேலம். எஸ். முனுசாமி

தன்மான மற்ற தமிழ்மகனும் தாம்பிறந்த
பொன்னாட்டைப் போற்றா புலவனும் - தன்தாய்
மொழிதன்னைப் பேசா தவனுமென்(று)நிம் மூவர்
அழிதலே வாழ்தலினும நன்று.

சாதிகளைப் பற்றி இவர்கள் கருத்து

தொகுப்பு: திருச்சி. இளங்கீரன்

★ சாதிமதச் சேற்றில் சிக்கி நாம் உழலக் கூடாது. இவற்றைத் தடுக்காவிடில் இந்தச்சில்லரை விஷயங்கள் நம் நாட்டையே நாசத்தில் ஆழ்த்தி விடும். வேரறுத்தேயாக வேண்டும்.

— பண்டித ஜவஹர்லால் நேரு

★ ஜாதிமுறைகள் பூராவும் அழிந்த பிறகுதான் இந்துக்களிடையே நாம் விரும்பும் ஒரு லௌகிக சமுதாயத்தைத் தோற்றுவிக்க முடியும் என்பதற்கு விவாதம் ஒன்றும் தேவையில்லை.

— கே. எம். பணிக்கர்

★ பலாத்காரத்தை உபயோகப் படுத்தி ஒரு சாதியாரை நீங்கள் அடக்கியாள்கிறீர்கள். இப்படி நீங்கள் அடக்கியாள்வதும், அவர்கள் அடங்கி வாழ்வதும் நியாயம் என்றுதானே நீங்கள் கருதுகிறீர்கள்

— ரூஸோ

★ ஹிந்து சாஸ்திரங்களில் தீண்டாமைக்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. அப்படி ஆதாரம் இருப்பதாகக் காட்டித், தீண்டாமையை ஹிந்துமதம் அங்கீகரிக்கிறது என்று யாராவது சொன்னால் நான் ஹிந்து மதத்தைத் துறந்துவிடச் சிறிதும் தயங்க மாட்டேன். தீண்டாதவன் என்று கருதப்படுகிற ஒருவன் இருக்கிறவரையில் நானும் தீண்டாதவனே

— காந்திஜி

★ தீண்டாமை என்பது ஹிந்து மதமல்ல. நமது கிரந்தங்களில் அதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. அந்தத் தீண்டாமைக் கறையானது நமது தேசிய சக்தியைக் குறைக்கிறது. மற்றவர்களுடைய மூச்சு பட்ட மாத்திரத்திலேயே அசுத்தர்களாகி விட்டதாகக் கருதுபவர்கள் மற்றவர்களை எப்படி பரிசுத்தப் படுத்தப் போகிறார்கள்?

— விவேகாநந்தர்

★ இந்தியாவில் பழங்குடிகளிடத்தே உண்டானவைகளே சாதிகள் என்று நான் கூற மாட்டேன். இந்தியாவினுள் நுழைந்து அங்குள்ள சுற்றுச் சார்புகளுடன் போராடியதற்கேற்ப ஆரியர்கள் அமைத்துக் கொண்டதுதான் சாதிகள்.

— எம். எமிலி சேனார்ட்

★ இந்துசமூகத்திற்குச் சாதிகள் ஒரு களங்கமாக இருக்கிறது. சாதி ஒழிந்தால் பார்ப்பனச் சமூகத்தின் உயர்வுக்குப் பேராபத்து உண்டாகும் என்பதை அநேகர் உணர்வது இல்லை. எனவே பார்ப்பனச் சமூகத்தின் சக்தியையும், செல்வாக்கையும் ஒழிக்கக்கூடிய சாதியொழிப்பு இயக்கத்தை அவர்கள் ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

— பி. ஆர். அம்பேத்கார்

★ மனித சமூக மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கே சாதி ஒரு பிறவி எதிரி. சாதி இயற்கை அளிக்கும் பிடிப்புகளைத் தகர்க்கிறது; நட்பை முறிக்கிறது; இதயத்தை இரும்பாக்குகிறது; இரக்கப் பண்பைக் குறைக்கிறது; தற்பெருமையையும் இறுமாப்பையும் வளர்க்கிறது; மனித உள்ளத்தில் வெறுப்பு மனப்பான்மைக்கு இடம் அளிக்கிறது; அன்பு வெள்ளத்திற்கு அணைபோடுகிறது; பரஸ்பரநம்பிக்கையை அழிக்கிறது; தூய ஆறுதலுக்கும் விரோதியாய் உள்ளது; அறிவுச்சுதந்திரத்திற்கு அணைபோடுகிறது; ஆராய்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறது; முன்னேற்றத்திற்குத் தனது முழு எதிர்ப்பைத் தெரிவிக்கிறது; கால மாறுதலை வெறுக்கிறது; விட்டுக் கொடுக்க இசைவதில்லை. சுயநலமே உருவானது.

— எம். ஏ. ஷெர்ரிங்.

★ எம். ஏ. ஷெர்ரிங்கும், அம்பேத்காரும் விவேகாநந்தரும் ரூஸோவும், பணிக்கரும், நேருவும் எப்போதோ ஒருமுறை, சொல்ல வேண்டுமே என்று எண்ணிச் சாதி ஒழிப்பின் தேவை பற்றிச் சொன்னார்கள் ஆனால். பெரியார் சாதியை ஒழிக்க வேண்டுமே என்ற கவலையோடு எப்போதும் கூறிவருகின்றார்.

ஆசிரியர்.

உதகைத் தோழர், S. M. கனி அவர்கள் "குயில்" வளர்ச்சிக்கென ரூபாய் ஒன்று அனுப்பியுள்ளார். பெற்றோம்.

நன்றி

அமைச்சர்.

விருந்துண்ணும் பிணம்.

("A dead man dining" என்ற ஆங்கிலச் சிறுகதையின் தழுவல்)

வித்துவான், பா. முத்து. புதுவை.

கிருத்துவர்கள் கைதேர்ந்த வல்லாரைக் கொண்டியக்கும் கீர்த்தி பெற்ற.
பருத்துயர்ந்த மலையொன்று பரந்தபெரும் வெள்ளிடையில் கிடத்தல் ஒத்த
மருத்துவம்செய் பணிமனையாம்; மாந்தரெலாம் அங்குவந்து நாளும் தம்மை
வருத்துகின்ற நோய்க்கெல்லாம் வருந்தாமல் போக்கிடுநல் வழியைக் கண்டார்;

சித்தத்தை இழந்தவர்கள், செம்மையுணர் வற்றவர்கள் எனச்சொல் கின்ற
பித்தர்கள் விடுதியதில் பெரும்பித்தன் ஒருவனது கதையைக் கேளிர்
'செத்தவன்யான், பிணமானேன், ஊண்வேண்டேன் மற்றெங்கும் செல்லேன்' [என்றான்
எத்தனையோ எடுத்துரைத்தும் பயனில்லை இடம்விட்டும் எழுந்தா னில்லை;

பைத்தியங்கள் பலஇதனைப் பார்த்தேதோ புரிந்ததுபோல் பல்லி ளிக்கும்
வைத்தியர்கள் வருவதையோ சிலநின்று சாளரத்தின் வழியாய்ப் பார்க்கும்;
கைத்திறத்தைக் காட்டல்போல் சிலகதவைக் கைப்பிடித்தே உலுக்கும்; சிந்தை
மெய்த்திறத்தை இழந்துழல்இப் பித்தர்நிலை காண்பவர்க்கும் பித்துத் தோன்றும்

வல்லபெரும் மருத்துவர்கள் வந்தார்கள் சிந்தித்தே இவனை மாற்ற
நல்லதொரு வழிகாண நாளெல்லாம் முயன்றுமொரு நலனும் காணார்
எல்லார்க்கும் பெருந்தலைவர் ஈடில்லா மருத்துவரோ இதனைக் கேட்டுக்
கல்லான அவன்மனதைக் கரைக்கின்ற வகைசெய்வேன் காண்மின்! என்றார்;

கரியநிற உடையாலே கண்வாயை நீக்கியுடல் மூடி விட்டார்
அரியசில மனிதர்களை; அணியாக நிறுத்தியவர் உடலின் மீது
வரிவரியாய்ச் சுண்ணத்தால் வெற்றெலும்புக் கூட்டைப்போல் வரைந்தார் [ஒன்றும்
புரியாத மற்றவரோ இதுவென்ன புதிரென்று திகைத்து நின்றார்;

அவைமணக்கும் பெரும்புலவர் ஆக்குதமிழ்க் கவியமுதம் அனைய நல்ல
சுவைமணக்கும் பல்லுணவும் பல்கறியும் சமைத்தேதும் சுணக்கம் இன்றி
இவையனைத்தும் இப்பித்தன் இருக்கின்ற அறைக்கெதிரே மணக்க வைத்தார்;
சவமொத்த எலும்புக்கூட் டாட்களதைச் சாப்பிடவும் வைத்து விட்டார்!

உணவேதும் காணாத அப்பித்தன் "உண்ணுகின்ற இவர்கள் பேயின்
கணங்களன்றோ?" எனக்கேட்டான்; மருத்துவரோ கனிவாக "இல்லை! இல்லை!
பிணங்களிவை!" எனச்சொன்னார் "இவையெல்லாம் பிணமாக இருந்தால் [நானும்
இணங்குகின்றேன் உணவுண்ண" எனச்சொன்னான், எழுந்துணவும் உண்ணு [கின்றான்!

மருந்தீந்து நோய்போக்கும் முறைமட்டும் மருத்துவர்கள் அறிந்தோ ரல்லர்;
விருந்தீந்து விந்தைநிறை செயல்செய்து பிணிபோக்க அறிந்தும் உள்ளார்;
அருந்தாமல் அணுஅணுவாய்ப் பிணமான பிணப்பித்தும் போயிற் றென்றால்
பெருந்தொண்டால் நம்முடைய பிணிபோக்கும் மருத்துவர்ப்பே ராற்றல் என்னே!

மாங்காட்டு மறையவன் மாண்புடையனா?

வித்துவான், தா. குருசாமி.

உள்ளதும் இல்லதும் புனைந்துரைக்கப்படுவது இலக்கிய வழக்கு. சிலப்பதிகாரத்தில் இயற்கைக்கு மாறான சம்பவங்கள் பல உண்டு; அவற்றுள் இஃதும் ஒன்று. எனினும் மறையோன் கூற்று உண்மைதான் என வாதிடின் சிலப்பதிகாரத்தில் காணும் ஏனைய இயற்கைக்குமாறான நிகழ்ச்சிகளும் உண்மையாக வேண்டும் அன்றோ? இளங்கோ எந்நெறியினரையும் ஒப்பநோக்கும் விரிந்த நோக்குடையர். இளங்கோ கவுந்தியடிகளின் வாயிலாக அவன் அறியாமையை இடித்துக் காட்டியதற்குக் கழுவாயாக – மறையவன் போன்ற ஏனைய மாந்தர் மகிழும்படியாக அவனுரையை உண்மையானதாகப் புனைந்துரைத்தார் எனின் பொருந்தும். மறையவனுரை உண்மைபயக்குந் தன்மையதாக இருந்திருப்பின் கோவலன் அவனுரையை மதியாமல் இடைவழிக்கு ஏகும் நிலையில், பாண்டியனின் கயற் கண்டு நீ போ – வராதே எனப் புனைந்துரைத்தது போல, இளங்கோ மறையவனுரையையும் புனைந்துரைத்திருக்க வேண்டும், துன்னிமித்தங்கள் பலவற்றை முன்கூட்டி உணர்த்தும் இளங்கோவடிகள், மறையவன் உரையை அவற்றுள் அடக்கி ஓதியதாலும் அவன் மொழி பொருளற்றதென அறிக. மறையவனுரை உண்மைப்பயனைத் தருவதாக இருப்பின் இளங்கோ வாளாவிடார்; புனைந்துரைத்து நெக்குருகி நெகிழ்ந்துரைப்பார். நுண்ணுணர்வுமிக்கார் இந்நிகழ்ச்சியை ஒருபோதும் உண்மையெனக் கொள்ளார். மயக்கும் தெய்வம் ஒன்றைக்கொண்டு மறையோன் கூற்றுஉண்மையே என வாதிடப்புகுவது, மண்குதிரையை நம்பி ஆற்றிறங்கிய கதைபோலத்தான் முடியும்.

இதுகாறுங் கூறியவற்றால், கவுந்தியடிகள் தம் தவஒழுக்கத்திற்கேற்பவேமறையோனிடம்ஒழுகினார் என்பதும், மறையவன் கோவலன் வினாவிற்கேற்ற விடைவழங்காது கல்லார்வாய்க்கேட்டஇயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகளை உளறிக் கொட்டினான் என்பதும், மறையவன் அறியாமை இருளை நீக்கிக் கவுந்தியடிகள் அறிவுவிளக்கு ஏற்றியருளினார் என்பதும், மறையோன்போன்ற கல்லாப் பேதையரும் களிபேருவகையடையும்படி அன்னோனுரையும் மெய்யானதாக இயற்கைக்கு மாறான ஒரு நிகழ்ச்சியை இளங்கோ புனைந்தார் என்பதும், கோவலன் கொலைப்படப் போவதைக் கவுந்தியடிகளாலேயே உணரமுடியாத பொழுது மறையோன் கூறிய பொய்கையை உணர்த்த முடியாது என்பதும், கோவலன் அடைந்தஇறுதிக்கு அவனது ஊழ்வினைப் பயனே காரணமாகுமேதவிர, கவுந்தியடிகள் காரணராகார் என்பதும் ஒருவாறுவிளங்கும் என முடிக்குதும்.

எழுந்து வாரீர்!

புலவர்-தொல்காப்பியன் அகரப்பேட்டை.

சோருக்குந் தமிழகத்தில் 'சாதம்' என்று
சொல்லுதற்குத் தமிழர்நா கூச வேண்டும்
கூருக்கிப் போட்டாலும் 'சாம்பார்' என்று
கூறுமல் குழம்பென்று சொல்ல வேண்டும்
சாறென்ற சொல்லிருக்க 'ரசம்'என தற்கு?
சத்துள்ள தமிழ்ச்சொற்கள் இருக்க, நல்ல
வீறுள்ள தமிழகத்தீர்! நீங்க ளேனோ
வேற்றுமொழிச் சொற்கள்பால் மோகங்
[கொண்டீர்?

தமிழ்ச்சொல்லைச் சொல்லுதற்குக் கூசு கின்ற
தமிழ்மகனும் இந்நாட்டு மனிதன் தானா?
தமிழ்ச்சொல்லைப் பேசுதற்குக் கூசும் நாக்குத்
தாயைத்தாய் என்பதற்கும் கூசு மன்றோ?
இமையைப்போல் நாமிருந்து கொண்டு, நல்ல
எழிலான தமிழ்மொழியைக் காத்தி டாமல்
உமியைப்போல் பயன்படாமல் இருக்க லாமா?
உயர்தமிழைக் காப்பதற்கு எழுந்து வாரீர்!

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0–15 (பதினைந்து காசு) அஞ்சல் தலைகள் அனுப்புக.

குயில்

Regd. No. M. 7030.

மாடியில் நிலவு

(காவடிச்சிந்து மெட்டு)

மாடியி லேஉலவும் வானப் புதுநிலவு
கூடிக் குலவ எனைக் கேட்டு-மெல்லப்
பாடி னாளே ஒரு பாட்டு-நல்
வாழ்வுக் கினி தாகிய நாள்
மகிழச்செய் யுந் திருநாள்
தேடிய நற்சுவைக் கூட்டு-வந்து
சேந்தி னாளே வலை போட்டு!

ஏடு விரிந்தமலர் எட்டிப் பார்த்தெனையே
மாடிக்கு வரும்படி கூவும்-கைம்
மலர்கள் நீட்டி எனைத் தாவும்
வானப் பறவையும் நானா?
மங்கைவ ராததும் ஏனோ!
வீடுநுழை யவும்அ வாவும்-அந்த
வீட்டார் தடுத்தால் உளம் நோவும்

கண்கள் அழகை எட்டும் காதுமொழியை எட்டும்
பெண்ணைத் தொடவோ கைஎட் டாது-நல்ல
பேரின்பம் இன்றுகிட் டாது
பிசைமுக் கனியின் சாறே,
மிகவும் பெரியதோர் ஆறாய்
அண்டையி லே ஓடும் போது-நான்
அள்ளி அருந்த முடி யாது

தண்ணென்ற தென்றலே சாற்றுவேன் ஒன்றையே
கண்ணாட்டிக் கேசென்று கூறு-நான்
கழறு வதையே ஒரு வாறு
கதிரொளி மங்கிற்று
விரைவினில் தோட்டத்துத்
திண்ணையின் மேலேவந் தேறு-வந்து
சேருவேன் ஏதிடை யூறு!

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.